Class X 2024

Series #CDBA

SET-4

प्रश्न-पत्र कोड
Q.P. Code **10**

रोल नं.
Roll No. | | | | | | | | |

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற 15 பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- இந்த வினாத்தாளில் 14 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **15** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி*
*Time allowed : 3 hours*

*மொ.மதிப்பெண்கள் : 80*
*Maximum Marks : 80*

**General Instructions :**
பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains* ***FIVE*** *sections.*
   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.
2. *It has total* ***14*** *questions.*
   இவ் வினாத்தாள் 14 கேள்விகளைக் கொண்டுள்ளது.
3. *Section* ***A*** *– contains* ***2*** *questions. [Question No.* ***1*** *to* ***2****]*
   பகுதி அ – 2 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 1 முதல் 2 வரை]
4. *Section* ***B*** *– contain* ***4*** *questions. [Question No.* ***3*** *to* ***6****]*
   பகுதி ஆ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 3 முதல் 6 வரை]
5. *Section* ***C*** *– contain* ***4*** *questions. [Question No.* ***7*** *to* ***10****]*
   பகுதி இ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 7 முதல் 10 வரை]
6. *Section* ***D*** *– contain* ***1*** *question. [Question No.* ***11****]*
   பகுதி ஈ – 1 வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் 11]
7. *Section* ***E*** *– contain* ***3*** *questions. [Question No.* ***12*** *to* ***14****]*
   பகுதி உ – 3 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 12 முதல் 14 வரை]
8. *Attempt as per specific instructions for each question.*
   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*
   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

## SECTION – A [Reading] 10 Marks

### பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 × 1 = 5

தமிழர்கள் பல்வேறு இடங்களிலும் பற்பல தொழில்களை உடையவர்களாய் இருந்தாலும் அனைவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தது போலவே ஒருவருக்கொருவர் சிறிதும் வேறுபாடு இல்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையில் விளங்கியிருந்தனர். எல்லோரும் இந்நாட்டு மக்கள் எல்லாருக்கும் தமிழ்மொழி உரியது. எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே என்னும் ஒற்றுமை அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

'யாதும் ஊரே யாவருங் கேளிர்'

என்பது அவர்களின் தீர்மானமான கொள்கை.

எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு கொள்வார்கள். தமிழ் மக்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும் கிடைக்க இடமிருந்தது.

தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் உண்பர்

'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'

என்று நற்றிணையில் இவ்வுண்மை குறிப்பிடப்படுகிறது. இத்தகைய கலந்த மனப்பான்மையே அவர்கள் நாகரிகம் என்று கருதினார்கள் என்றால் அவர்களிடம் உள்ள மாட்சிமைதான் எவ்வளவு பெரியது! சங்ககால முன்னோர்களும் இவ்வகையில் நனி நாகரிகராய் விளங்கியிருந்தனர்.

வினாக்கள்:

(i) அக்கால மக்கள் எப்படி விளங்கினர்?

(A) உயர்ந்த அன்பு

(B) ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைபோல்

(C) உயர்ந்த ஒழுக்கம்

(D) உயர்ந்த கொள்கை

(ii) தமிழர்களிடம் என்ன மேலோங்கியிருந்தது?

(A) நல்லெண்ணம்

(B) பிரிவினை எண்ணம்

(C) வேற்றுமை எண்ணம்

(D) ஒற்றுமை எண்ணம்

(iii) தமிழ் மக்களின் தீர்மானமான கொள்கை என்ன?

(A) பல் சான்றீரே! பல் சான்றீரே!

(B) 'நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'

(C) யாதும் ஊரே யாவரும் கேளிர்

(D) பிரிவினைவாதம்

(iv) 'நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' என்பது ________ செய்யுளில் இடம் பெற்றுள்ளது.

(A) நற்றிணை

(B) அகநானூறு

(C) குறுந்தொகை

(D) புறநானூறு

(v) தமிழர்கள் உணவு உட்கொள்ளும் முறை யாது ?

(A) எல்லோரும் தனித்தனியாக அமர்ந்து உண்ணுதல்

(B) ஒன்றாக அமர்ந்து உண்ணுதல்

(C) தம் குடும்பத்தோடு அமர்ந்து

(D) தம் உறவினரோடு அமர்ந்து

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

நாடோடி மனிதனை நாகரிக மனிதனாக மாற்றி அமைத்ததே அறிவியல் தான். மலைக்குள் வாழ்ந்தவன் இன்று மாளிகையில் வாழ்கின்றான். நடந்து சென்றவன் பறந்து செல்கிறான். பச்சை மாமிசத்தை இச்சையுடன் தின்றவன் சுட்டுத் தின்பதற்காகத் தீயைக் கண்டபோது அறிவியல் தோன்றியது. இரு சக்கர வண்டியைக் கண்டபோது அறிவியல் நிமிர்ந்தது. பருத்திப் பஞ்சின் பக்குவம் கற்றபோது வேரையே திருத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. தேவையே கண்டுபிடிப்பின் தந்தை என்பது அறிஞர் கூற்று. வீட்டில் தான் எத்தனை மாற்றங்கள். விளக்கெண்ணெய் வெளிச்சத்தில் வீட்டில் இருந்தவன் மின் விளக்கின் உதவியால் இருட்டைப் பகலாக்கி இன்பம் காணுகிறான். மனித மூளையின் மகத்தான சாதனை உள்ளங்கையில் உலகத்தைக் கொண்டு வந்து விட்டது. செயற்கை இதயமும் மாற்றுச் சிறுநீரகமும் மனித வாழ்வை மலர வைத்து விட்டது. அறிவு நிறைந்த அறிவியலை ஆக்கத்திற்குப் பயன்படுத்த மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

**வினாக்கள்:**

(i) அறிவியல் அறிஞரின் கூற்று யாது ?

(ii) இன்று மாளிகையில் வாழ்ந்தவன் அன்று எங்கு வாழ்ந்தான் ?

(iii) நாடோடி மனிதனை நாகரிக மனிதனாக மாற்றி அமைத்தது எது ?

(iv) மனித மூளையின் மகத்தான சாதனை எது ?

(v) மாணவர்களை எதற்கு ஊக்கப்படுத்த வேண்டும் ?

## SECTION – B [Grammar] 12 Marks

## பகுதி – ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) $3 \times 1 = 3$

(i) இனமொழி விடை

(A) ஆடுவாயா? என்ற வினாவிற்கு ஆடுவேன் எனக் கூறுவது

(B) ஆடுவாயா? என்ற வினாவிற்கு ஆட மாட்டேன் என உரைப்பது

(C) ஆடுவாயா? என்ற வினாவிற்கு பாடுவேன் என உரைப்பது

(D) பாடுவாயா? என்ற வினாவிற்கு சிரிப்பேன் என உரைப்பது.

(ii) படர்க்கை பெயர்கள்

(A) நான், நாங்கள்

(B) நீ, நீங்கள்

(C) அவன், அவள்

(D) நீர், நீவிர்

(iii) வினையெச்சத் தொடர்

(A) சென்று வந்தான்

(B) சென்ற மாணவன்

(C) வந்தான் சென்றான்

(D) பாடினாள் கண்ணகி

(iv) பண்புத்தொகை

(A) இன்சொல்

(B) வீசு தென்றல்

(C) இந்திய நாடு

(D) கார் குழல்

(v) தொடர்மொழி

(A) வா, போ (B) கடமையைச் செய்

(C) தாமரை (D) உறங்கல்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. (மூன்று மட்டும்) $3 \times 1 = 3$

(i) விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் __________ பெயராகும்

(A) முதனிலைத் தொழில்

(B) தொழில்

(C) முதனிலைத் திரிந்த தொழில்

(D) வினையாலணையும்

(ii) உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது __________ எனப்படும்.

(A) உம்மைத்தொகை (B) உவமைத்தொகை

(C) வினைத்தொகை (D) பண்புத்தொகை

(iii) முற்றுப் பெறாத வினை பெயர்ச்சொல்லைத் தொடர்வது __________ எனப்படும்.

(A) பெயரெச்சத்தொடர் (B) வினையெச்சத்தொடர்

(C) வினைமுற்றுத்தொடர் (D) இடைச்சொல் தொடர்

(iv) இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது __________ ஆகும்.

(A) வழுநிலை (B) வழா நிலை

(C) வழுவமைதி (D) பொது மொழி

(v) அகத்திணைகள் __________ வகைப்படும்

(A) ஐந்து (B) ஏழு

(C) எட்டு (D) ஆறு

5. இலக்கணக் குறிப்பு எழுதுக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3 × 1 = 3

(i) ஆடுக

(A) வியங்கோள் வினைமுற்று

(B) பண்புத்தொகை

(C) வினையாலணையும் பெயர்

(D) தொழிற்பெயர்

(ii) செந்தீ

(A) பண்புத்தொகை

(B) வினைத்தொகை

(C) இருபெயரொட்டு பண்புத் தொகை

(D) உம்மைத்தொகை

(iii) முகிழ்ந்த

(A) வினையெச்சம் (B) பெயரெச்சம்

(C) தனிமொழி (D) பொதுமொழி

(iv) நடந்து வந்தான்

(A) உம்மைத்தொகை

(B) வினையெச்சத்தொடர்

(C) பெயரெச்சத்தொடர்

(D) எண்ணும்மை

(v) வாழ்த்துவோம்

(A) தன்மை ஒருமை வினைமுற்று

(B) தன்மை பன்மை வினைமுற்று

(C) படர்க்கை ஒருமை வினைமுற்று

(D) படர்க்கை பன்மை வினைமுற்று

6. கூறியவாறு செய்க : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் – அளபெடையைக் கண்டறிக.

(A) ஒற்றளபெடை

(B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை

(D) செய்யுளிசை அளபெடை

(ii) ஞாயிறு, சித்திரை – இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக மாற்றுக.

(A) கிழமை ஞாயிறு, மாதம் சித்திரை

(B) கிழமை, மாதம்

(C) ஞாயிற்றுக்கிழமை, சித்திரை மாதம்

(D) சித்திரை ஞாயிறு

(iii) நன்மையானமொழி – பண்புத்தொகையாக மாற்றுக.

(A) நன்மைமொழி

(B) மொழிநன்மை

(C) நன்மொழி

(D) நன்மை

(iv) சொக்க வெள்ளிப்பாற்குடமோ? அமுத ஊற்றோ? – வினாவகையைக் கூறு.

(A) அறி வினா

(B) ஐய வினா

(C) அறியா வினா

(D) கொடை வினா

(v) இளவேனிற் காலம் – பெரும் பொழுதிற்கான மாதங்களை எடுத்தெழுதுக.

(A) சித்திரை, வைகாசி

(B) ஆனி, ஆடி

(C) ஆவணி, புரட்டாசி

(D) ஐப்பசி, கார்த்திகை

## SECTION – C (Main Course Book) 31 Marks

## பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. $2 \times 1 = 2$

(i) அஞ்சும் அறியான் __________ ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

(A) அமைவிலான் (B) அமைவிலன்

(C) பகைவிலான் (D) பகைவிலான்

(ii) கரப்பிடும்பை இல்லாரைக் காணின் __________
எல்லாம் ஒருங்கு கெடும்.

(A) நிரப்பிடும்பை

(B) நிறப்பிடும்பை

(C) நிரைப்பிடும்பை

(D) நிறைப்பிடும்பை

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. $5 \times 1 = 5$

'அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் என்னே.'

வினாக்கள் :

(i) பாடலடியில் குறிப்பிடப்படும் மன்னன் __________

(A) சேரன் (B) சோழன்

(C) பாண்டியன் (D) நன்னன்

(ii) மேற்கண்ட பாடலடிகள் இடம் பெற்ற நூல் ________

(A) பரிபாடல்

(B) மலைபடுகடாம்

(C) ஆற்றுப்படை

(D) நீதிவெண்பா

(iii) வயிரியம் – சொல்லின் பொருள் யாது ?

(A) வைரம்

(B) கூத்தர்

(C) பாணர்

(D) சோறு

(iv) இச்செய்யுளில் அமைந்துள்ள எதுகையை எடுத்து எழுதுக.

(A) அலங்கு, அடைந்திருந்த

(B) அலங்கு, சிலம்பு

(C) வலம்படு, வயிரியம்

(D) நோன்தாள், எய்தி

(v) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ________

(A) மலைபடுகடாம்

(B) நற்றிணை

(C) பதிற்றுப்பத்து

(D) புறநானூறு

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. $3 \times 3 = 9$

(i) பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக அமைந்த கவிஞரின் கருத்துகளை தொகுத்து எழுதுக.

(ii) பரஞ்சோதி முனிவர் பற்றி குறிப்பு வரைக.

(iii) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

(iv) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

(v) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. $3 \times 5 = 15$

(i) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் விரிவான உரைக் குறிப்புகளை எழுதுக.

(ii) நும் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை நயம்பட விவரித்து எழுதுக.

(iii) எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தால் மனிதகுலத்திற்கு ஏற்படுகிற நன்மைகள் குறித்து விரிவான தொகுப்புரை ஒன்று தயார் செய்க.

(iv) மொழிபெயர்ப்பின் செம்மை பற்றி விவரி.

(v) தப்பு ஆட்டம் – விளக்குக.

## SECTION – D (Non-Detail) 10 Marks

### பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.

**1 × 10 = 10**

(i) கோபல்லபுரத்து மக்கள்.

(ii) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை.

(iii) புதிய நம்பிக்கை

## SECTION – E (Creative Writing) 17 Marks

### பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **1 × 3 = 3**



**For Visually impaired Candidates**

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

(ii) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. $1 \times 8 = 8$

(i) *Neet* – தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற உன் தமக்கையைப் பாராட்டி கடிதம் ஒன்று வரைக.

**(அல்லது) (OR)**

(ii) உங்கள் பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் ஒன்று வரைக.

*(இரண்டு கடிதங்களிலும் 2ம் முகவரி அ. அனீஸ்பாத்திமா/அ.அன்வர் 10; பெரிய வீதி, ஜவஹர் நகர், சென்னை – 600 018)*

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. $1 \times 6 = 6$

(i) முன்னுரை – கொரோனாவும் அறிகுறியும் – கொரோனாவின் தோற்றம் – மனிதர்களை கொல்வது எப்படி – பாதிப்புகள் – கொரோனாவிற்குத் தீர்வு – முடிவுரை

**(அல்லது) (OR)**

(ii) முன்னுரை – வருமுன் காப்போம் – உணவே மருந்து – நோயற்ற வாழ்வு – உடற்பயிற்சி – முடிவுரை

**(அல்லது) (OR)**

(iii) முன்னுரை – முயன்றால் முடியும் – மனோதைரியம் – முயன்றால் இயலாதது எதுவுமில்லை – வென்றவர்களில் சிலர் – முடிவுரை

---